**அக்டோபர் – 19**

# TNPSC துளிகள்

- அமெரிக்க கருவூலத் துறையின் முன்னாள் தலைமைப் பணியாளர் டான் காட்ஸ், சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) முதல் துணை நிர்வாக இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- சுகாதாரத் துறையினால் வெளியிடப்பட்ட அரசு உத்தரவின்படி, தமிழ்நாட்டில் உள்ள நோயாளிகள் தற்போது "மருத்துவப் பயனாளிகள்" அல்லது "பயனாளிகள்" என்று குறிப்பிடப்படுவர்.

# தேசியச் செய்திகள்

## நகராட்சிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கும் திட்டம்





- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது 2027 ஆம் ஆண்டிற்குள் அனைத்து நகராட்சிக் கழிவுகளையும் சாலைக் கட்டுமானத்திற்குப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.
- இதுவரையில், நாடு முழுவதும் உள்ள சாலை அமைக்கும் திட்டங்களில் NHAI ஆனது 80 லட்சம் டன் நகராட்சிக் கழிவுகளைப் பயன்படுத்தியுள்ளது.
- NHAI ஆனது அகமதாபாத்-புனே நெடுஞ்சாலையில் 25 லட்சம் டன்களையும், மும்பை-டெல்லி நெடுஞ்சாலையில் 40 லட்சம் டன் கழிவுகளையும் பயன்படுத்தியது.
- கால்நடைக் கழிவுகளிலிருந்து தயாரிக்கப்பட்ட, அதிகாரப்பூர்வமாக சான்றளிக்கப் பட்ட உயிரி நீலக்கீலைப் பயன்படுத்தி ஒரு சாலை கட்டமைக்கப்பட்டது.

## அரசு வழக்கு கண்காணிப்பு

- சட்ட விவகாரத் துறையானது சட்டத் தகவல் மேலாண்மை மற்றும் விவரக் குறிப்பு அமைப்பின் (LIMBS) கீழ் " Live Cases " முகப்புப் பக்கத்தினை தொடங்கியது.
- இந்த முகப்புப் பக்கமானது, அரசு நீதிமன்ற வழக்குகள் மற்றும் வரவிருக்கும் விசாரணைகள் குறித்த நிகழ்நேரத் தரவை வழங்குகிறது.

- இந்த அமைப்பு ஆனது தற்போது 53 அமைச்சகங்கள் மற்றும் துறைகளைச் சேர்ந்த 7,23,123 நேரடி வழக்குகளைக் கண்காணிக்கிறது.
- இந்த தளத்தில் 13,000க்கும் மேற்பட்ட அமைச்சகப் பயனர்கள் மற்றும் 18,000 வழக்கறிஞர்கள் வழக்கு தொடர்பான தகவல்களைத் தொடர்ந்து புதுப்பிக்கின்றனர்.
- இந்த முன்னெடுப்பானது அரசாங்க வழக்கு மேலாண்மையை மேம்படுத்துவதையும் தரவு சார்ந்த முடிவெடுப்பதை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## புதிய சரக்குப் போக்குவரத்து சேவை மாதிரி




- இந்திய இரயில்வே நிர்வாகமானது ஆரம்பம் முதல் இறுதிக் கட்டம் வரையிலான சரக்கு மற்றும் சிப்பம்/பார்சல் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தச் சேவைக் கிடங்குகளில் இருந்து இறுதி விநியோக இடங்களுக்கு சரக்குப் போக்குவரத்தினை அனுமதிக்கிறது.
- இந்த மாற்றத்தை ஆதரிப்பதற்காக மூன்று தளவாட முன்னேடுப்புகள் தொடங்கப் பட்டன.

- CONCOR (இந்திய கொள்கலன் கழகம்) நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் உன்னாவோவில் உள்ள சோனிக் என்ற இடத்தில் ஒரு தளவாட மையம் அமைக்கப் பட்டுள்ளது.
- டெல்லி மற்றும் கொல்கத்தா இடையேயான கொள்கலன் இரயில் சேவையானது சரக்குகளின் உறுதியளிக்கப்பட்ட போக்குவரத்திற்கான வாய்ப்பினை வழங்குகிறது.
- மும்பை மற்றும் கொல்கத்தா இடையேயான சிப்பம் சேவையில் சேமிப்பு மற்றும் சிறிய சரக்கு கையாளுதல் ஆகியவை அடங்கும்.

## SACHET தளம்





- ஒருங்கிணைந்த முன் எச்சரிக்கை அமைப்பு (SACHET) என்பது தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தினால் (NDMA) உருவாக்கப்பட்ட இந்தியாவின் பேரிடர் முன்னெச்சரிக்கை தளமாகும்.
- இது SMS, கைபேசிகளில் ஒளிபரப்பு, கைபேசிச் செயலி, தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற பல ஊடகங்களைப் பயன்படுத்தி நிகழ்நேரப் புவியிட இலக்கு சார்ந்த முன் எச்சரிக்கைகளை வழங்குகிறது.
- இந்த அமைப்பினை தொலைத் தொடர்புத் துறையின் கீழ் உள்ள தொலைத் தொடர்பு மேம்பாட்டு மையம் (C-DOT) உருவாக்கியது.
- அனைத்து இந்திய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் செயல்படுகின்ற SACHET, பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடிமக்களுக்கு எச்சரிக்கைகளை அனுப்புகிறது.
- SACHET செயலி இந்திய வானிலை ஆய்வுத் துறையிலிருந்து (IMD) பேரிடர் எச்சரிக்கைகள் மற்றும் வானிலை தகவல்களை வழங்குகிறது.

## RTI சட்டத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு

- 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமை (RTI) சட்டம் அமல்படுத்தப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவாகியுள்ளது.
- தகவல் அறியும் உரிமை (RTI) சட்டம் ஆனது, ஆளுகையில்/நிர்வாகத்தில்

வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்காக 2005 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதியன்று இயற்றப்பட்டது.


- 1990 ஆம் ஆண்டுகளில் இராஜஸ்தானில் மஸ்தூர் கிசான் சக்தி சங்கதன் (MKSS) தலைமையிலான அடிமட்ட அளவிலான செயல்பாடு மற்றும் பொது விசாரணைகளிலிருந்து RTI சட்டம் உருவானது.
- இந்த இயக்கமானது 2005 ஆம் ஆண்டு மே 12 ஆம் தேதியன்று பாராளுமன்றத்தினால் தேசியச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக மாநில அளவிலான பல RTI சட்டங்களுக்கு வழி வகுத்தது.
- அரசியலமைப்பின் 19வது சரத்தின் கீழ் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையின் ஒரு பகுதியாக தகவல் அறியும் உரிமையை RTI சட்டம் அங்கீகரிக்கிறது.
- 2023–24 ஆம் ஆண்டில் 1.75 மில்லியனுக்கும் அதிகமான RTI விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப் பட்டன என்ற நிலையில், மேலும் இது 67,615 நிராகரிக்கப்பட்டப் பதிவுகளுடன் ஒரு தசாப்தத்திற்கு முன்பு இருந்ததை விட விண்ணப்பங்கள் தாக்கலானது இரு மடங்கு அதிகமாகும்.




## சுண்ணாம்புக்கல் - ஒரு முக்கிய கனிமம்

- சுரங்க அமைச்சகம் ஆனது அனைத்து சுண்ணாம்புக்கல் வகையையும் ஒரு முக்கிய கனிமமாக மறுவகைப்படுத்தியுள்ளது.
- இனி, சுண்ணாம்புக்கல் சூளைகளில் பயன்படுத்தப்படும் சுண்ணாம்புக்கல் புதிய வகைப்பாட்டின் கீழ் சிறு கனிமமாகக் கருதப்படாது.
- இந்த மாற்றமானது, இறுதிப் பயன்பாட்டு கட்டுப்பாடுகளை நீக்குகிறது மற்றும் குத்தகைதாரர்கள் எந்த நோக்கத்திற்காகவும் சுண்ணாம்புக்கல்லை விற்க அனுமதிக்கிறது.
- நிதி ஆயோக் உறுப்பினர் தலைமையிலான அமைச்சகங்களுக்கு இடையேயான குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- தற்போதுள்ள சிறு கனிம குத்தகைதாரர்கள் 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் இந்திய சுரங்க வாரியத்தில் பதிவு செய்ய வேண்டும்.

❖ அங்கீகரிக்கப்பட்ட சுரங்கத் திட்டங்கள் ஆனது, 2027 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை அல்லது இந்தியச் சுரங்க வாரியத்திலிருந்து புதிய ஒப்புதல் பெறும் வரை தொடரப் படும்.




# சர்வதேசச் செய்திகள்

## UNHRC அங்கத்துவம் 2026-28




❖ 2026–2028 ஆம் காலகட்டத்திற்கான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கான (UNHRC) அங்கத்துவத்திற்கு இந்தியா போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

❖ 2006 ஆம் ஆண்டில் UNHRC உருவாக்கப்பட்டதிலிருந்து இந்தியா ஏழாவது முறையாக இந்தச் சபையில் உறுப்பினராக உள்ளது.

❖ UNHRC என்பது உலகளவில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான பொறுப்பினைக் கொண்டுள்ள ஓர் அரசுகளுக்கிடையேயான

அமைப்பாகும்.

- இது 2006 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப்பட்டது.
- இந்த சபையின் தலைமையகம் ஆனது சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் அமைந்துள்ளது.
- இது ஐ.நா. பொதுச் சபையினால் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 47 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது.
- ஐந்து பிராந்தியக் குழுக்களிடையே இடங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதுடன், ஒவ்வோர் உறுப்பினர் நாடும் மூன்று ஆண்டு காலத்திற்கு உறுப்பினராகச் செயல்படுகின்றன.
- இந்தியா முன்னதாக 2006–2007, 2011–2014, 2014–2017, 2017–2020, 2022–2024 மற்றும் தற்போது 2026–2028 ஆகிய காலங்களில் அதன் உறுப்பினராகச் செயல்படுகிறது.
- இந்த சபையானது உலக நாடுகளின் உரிமைகள் ஆவணங்களை மதிப்பாய்வு செய்கிறது, நிபுணர்களை நியமிக்கிறது மற்றும் உண்மை கண்டறியும் பணிகளை அங்கீகரிக்கிறது.

## இந்தியா-மங்கோலியா உத்திசார் கூட்டாண்மை




- இந்தியா மற்றும் மங்கோலியா ஆகிய நாடுகள் 2025 ஆம் ஆண்டில் அவற்றின் 70 ஆண்டு கால அரசுமுறை உறவுகளையும், 10 ஆண்டுகால உத்திசார் கூட்டாண்மையையும் கொண்டாடுகின்றன.
- இரு நாடுகளின் பகிரப்பட்டப் பாரம்பரியம் மற்றும் நாகரிக பிணைப்புகளைக் கொண்டாடுவதற்காக ஒரு கூட்டு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.
- இந்தியா புத்த நினைவுச் சின்னங்களை அனுப்பவும் 1 மில்லியன் பண்டைய கையெழுத்துப் பிரதிகளை டிஜிட்டல் மயமாக்கவும் உள்ளது.
- இந்திய நிபுணர்களின் ஈடுபாட்டுடன் சேர்த்து, இந்தியா வழங்கும் 1.7 பில்லியன் டாலர் மதிப்பிலான கடன், 2,500க்கும் மேற்பட்ட மங்கோலியாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கான நிதி ஆதரவினை அளிக்கிறது.

- பௌத்த புலமை சார்ந்த உறவுகளை வலுப்படுத்த ஒரு சமஸ்கிருத ஆசிரியர் காண்டன் மடாலயத்திற்கு அனுப்பப்படுவார்.
- லடாக்-அர்கங்காய் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆனது இந்தியாவிற்கும் மங்கோலியாவிற்கும் இடையிலான பிராந்தியக் கலாச்சார ஒத்துழைப்பை அதிகரிக்கும்.

### பாதுகாப்பு சபையின் 1325 தீர்மானத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவு




- 2025 ஆம் ஆண்டானது 2000 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் 1325 தீர்மானத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இது பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) செயல்பாட்டு நிரலை நிறுவியது.
- தீர்மானம் 1325 ஆனது, உலகளவில் அமைதியைக் கட்டமைத்தல், மோதல் தடுப்பு மற்றும் மோதலுக்குப் பிந்தைய மீட்பு ஆகியவற்றில் பெண்கள் பங்கேற்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.
- 2000 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் சபையின் உறுப்பினராக இருந்த நமீபியா, இந்தத் தீர்மானத்தினை ஏற்பதில் முக்கியப் பங்கு வகித்தது.


## பொருளாதாரச் செய்திகள்

### 16வது நிதி ஆணையத்தின் பதவிக் கால நீட்டிப்பு

- அரசாங்கமானது 16வது நிதி ஆணையத்தின் பதவிக் காலத்தை 2025 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.
- இந்த ஆணையமானது அரவிந்த் பனகாரியாவினைத் தலைவராக கொண்டு 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது.
- இது 2026–2031 ஆம் ஆண்டிற்கான மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான வரி பகிர்வை பரிந்துரைக்கும்.
- அறிக்கை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு முதலில் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 31

ஆம் தேதியாக இருந்தது.

- இது 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழான பேரிடர் மேலாண்மை நிதியுதவியையும் மதிப்பாய்வு செய்யும்.
- இந்த ஆணையத்தில் பொருளாதார வல்லுநர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் உட்பட நான்கு உறுப்பினர்கள் உள்ளனர்.
- 15வது நிதி ஆணையமானது 2021–2026 ஆம் ஆண்டிற்கு மாநிலங்களுக்கு 41% வரிப் பகிர்வைப் பரிந்துரைத்திருந்தது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### புதிய IUCN செந்நிறப் பட்டியல்




- IUCN அமைப்பானது தற்போது 172,620 இனங்களைக் கண்காணித்தது, அவற்றில் 48,646 அழியும் அபாயத்தில் உள்ளது என்பதைக் குறிப்பிட்டு அதன் செந்நிறப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது.
- ஹூட் சீல்கள்/நீர் நாய்கள் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனத்திலிருந்து அருகி வரும் இனங்கள் என்ற நிலைக்கு மாற்றப்பட்டுள்ளன, அதே நேரத்தில் பிடரி மற்றும் யாழ் போன்ற வளைவுடைய நீர் நாய்கள் தற்போது அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- புவி வெப்பமடைதல், கடல் போக்குவரத்து, தொழில்துறை மீன்பிடித்தல் மற்றும் எண்ணெய்ப் பிரித்தெடுத்தல் காரணமாக ஆர்டிக் நீர் நாய்கள் அதிகளவில் ஆபத்தில்

உள்ளன.

- பனிப் பகுதிகளைச் சார்ந்திருக்கும் நீர் நாய்கள் முக்கிய இனங்கள், மீன்களை உட்கொள்வதன் மூலமும் ஊட்டச்சத்துக்களை மறுசுழற்சி செய்வதன் மூலமும் கடல் சுற்றுச் சூழல் அமைப்புகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- 2016 ஆம் ஆண்டில் 44 சதவீதமாக இருந்த பறவை இனங்கள் எண்ணிக்கை சரிவு 61 சதவீதமாக குறைந்து வருவதுடன் பறவை இனங்களின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது.
- உலகளவில் மதிப்பிடப்பட்ட 11,185 பறவை இனங்களில், 1,256 இனங்கள் அல்லது 11.5 சதவீதம் தற்போது உலகளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.
- மடகாஸ்கரில், புதிதாக 14 பறவை இனங்கள் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதோடு, மேலும் மூன்று வெப்பமண்டலக் காடுகள் இழப்பு காரணமாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாக வகைப்படுத்தப் பட்டு உள்ளன.
- பல தசாப்த கால வளங்காப்பு காரணமாக, 1970 ஆம் ஆண்டுகளில் இருந்து 28 சதவீத எண்ணிக்கை அதிகரிப்புக்குப் பிறகு பச்சை ஆமை இனங்கள் இனி அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்படவில்லை.


## பனிச்சிறுத்தைகளில் குறைந்த மரபணு பன்முகத் தன்மை




- ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் புதிய ஆய்வில், பனிச்சிறுத்தைகள் எந்தப் பெரும் பூனை இனங்களிலும் இல்லாத, சிவிங்கிப் புலிகளை விடவும் மிகக் குறைந்த மரபணு பன்முகத்தன்மையைக் கொண்டுள்ளன.
- ஆராய்ச்சியாளர்கள் அதன் குறைந்த மரபணு பன்முகத் தன்மைக்குச் சமீபத்திய இன விருத்திக்குப் பதிலாக, வரலாற்று ரீதியாக காணப்படும் சிறிய எண்ணிக்கையே காரணம் என்று கூறுகின்றனர்.
- பனிச்சிறுத்தைகள் தீங்கு விளைவிக்கும் பிறழ்வுகளைத் திறம்பட அகற்றி, குறைந்த மரபணு மாறுபாடு இருந்த போதிலும் ஆரோக்கியத்தைப் பராமரிக்கின்றன.
- மற்ற பாந்தெரா இனங்களுடன் ஒப்பிடும்போது இந்த இனம் கணிசமாக குறைவான தீங்கு விளைவிக்கும் ஓரினச்சேர்க்கை/ஹோமோசைகஸ் மரபணு எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.

- உலகளாவிய காடுகளில் அவற்றின் எண்ணிக்கை 12 ஆசிய நாடுகளில் 4,500 முதல் 7,500 வரை இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- லடாக்கில் அதிகபட்சமாக 477 உள்ளதுடன் இந்தியாவில், சமீபத்திய கணக்கெடுப்பில் 718 பனிச்சிறுத்தைகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- சீனா மற்றும் மங்கோலியாவிற்கு அடுத்தபடியாக, உலகளவில் பனிச் சிறுத்தைகளின் மூன்றாவது அதிக எண்ணிக்கை இந்தியாவில் காணப்படுகிறது.

## யானைகள் கணக்கெடுப்பு 2025




- 2025 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதல் டிஎன்ஏ அடிப்படையிலான தேசிய கணக்கெடுப்பின் படி, இந்தியாவின் காட்டு யானைகளின் எண்ணிக்கை தற்போது 22,446 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2017 ஆம் ஆண்டில் 27,312 யானைகள் என்ற மதிப்பீட்டிலிருந்து பதிவான 18 சதவீதச் சரிவைக் குறிக்கிறது.
- இந்தக் கணக்கெடுப்பை சுற்றுச்சூழல் அமைச்சகம், யானைகள் வளங்காப்புத் திட்டம் மற்றும் இந்திய வனவிலங்கு நிறுவனம் ஆகியவை மேற்கொண்டன.
- அறிவியலாளர்கள் 21,056 சாண மாதிரிகளைச் சேகரித்து, 4,065 தனித்துவமான யானைகளை அடையாளம் காண டிஎன்ஏ அடையாளங்களைப் பயன்படுத்தினர்.
- இந்தக்' கணக்கெடுப்பு 18,255 முதல் 26,645 யானைகள் வரையிலான மொத்த எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கு குறியிட்டு மீண்டும் கண்டறியும் மாதிரியைப் பயன்படுத்தியது.
- கர்நாடகாவில் அதிகபட்சமாக 6,013 யானைகளும், அதைத் தொடர்ந்து அசாமில் 4,159 யானைகளும், தமிழ்நாட்டில் 3,136 யானைகளும் உள்ளன.
- பிராந்தியங்களில் மிக உயர்ந்ததாக மேற்குத் தொடர்ச்சி மலையில் 11,934 யானைகள் உள்ளன, அதைத் தொடர்ந்து வடகிழக்குப் பிராந்தியத்தில் 6,559 யானைகள் உள்ளன.

- இந்தக் கணக்கெடுப்பு ஆனது M-Stripes (புலிகளுக்கான கண்காணிப்பு அமைப்பு – தீவிரமானப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அந்தஸ்து) செயலியைப் பயன்படுத்தி நிலப்பரப்பு ஆய்வுகள், செயற்கைக்கோள் வரைபடமிடல் மற்றும் மரபணு பகுப்பாய்வு ஆகிய மூன்று கட்ட செயல்முறையைப் பயன்படுத்தியது.
- உலகளாவிய ஆசிய யானைகள் எண்ணிக்கையில் 60 சதவீதத்திற்கும் அதிகமானவை இந்தியாவில் காணப்படுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## இந்தியாவின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு தரவு மையம்

- இந்தியாவின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு (AI) தரவு மையம் ஆனது ஆந்திரப் பிரதேசத்தில் கட்டப்பட உள்ளது.
- விசாகப்பட்டினத்தில் உள்ள கூகிளின் 1-ஜிகாவாட் (GW) அளவிலான மாபெரும் தரவு மையம் ஆனது மாநில அரசிற்கு 10,000 கோடி ரூபாய் வருவாயை ஈட்டும்.
- இந்த மையமானது, இந்தியாவின் முதல் ஜிகாவாட் அளவிலான AI தரவு மையமாகவும், கூகிளின் முதல் AI மையமாகவும் இருக்கும்.
- இந்தத் திட்டம் ஆந்திரப் பிரதேசத்தினை டிஜிட்டல் மையமாக நிலைநிறுத்துவதையும், இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் மாற்றத்தை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஹென்லே கடவுச்சீட்டுக் குறியீடு 2025

- 2025 ஆம் ஆண்டு ஹென்லேக் கடவுச் சீட்டுக் குறியீட்டில் 57 நாடுகளுக்கான நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத பயண அனுமதியுடன் இந்தியாவின் கடவுச் சீட்டு 85வது இடத்தில் உள்ளது.
- கடந்த ஆண்டு 62 நாடுகளுக்கான நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத பயண

அனுமதியுடன் 77வது இடத்திலிருந்த இந்தியாவின் தரவரிசையானது 2025 ஆம் ஆண்டில் இந்த இடத்திற்குச் சரிந்துள்ளது.

- 193 நாடுகளுக்கான நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத பயண அனுமதியுடன் சிங்கப்பூர் முன்னணியில் உள்ளது.
- அமெரிக்கா முதல் முறையாக முதல் 10 இடங்களிலிருந்து வெளியேறியது என்பதோடு, தற்போது 180 நாடுகளுக்கான நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத பயண அனுமதியுடன் 12வது இடத்தில் உள்ளது.
- அண்டை நாடுகளான பாகிஸ்தான் 103வது இடத்திலும், வங்காளதேசம் 100வது இடத்திலும், நேபாளம் 101வது இடத்திலும், பூடான் 92வது இடத்திலும் உள்ளன.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச பெண் குழந்தைகள் தினம் 2025 - அக்டோபர் 11




- பாலினச் சமத்துவமின்மை, பாகுபாடு மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது 2011 ஆம் ஆண்டில் இந்த நாளை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "The girl I am, the change I lead: Girls on the frontlines of crisis" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## மடகாஸ்கர் நெருக்கடி 2025

- ஊழல் தொடர்பான போராட்டங்களுக்கு மத்தியில் அதிபர் மறைந்ததையடுத்து மடகாஸ்கர் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.
- பாராளுமன்றக் கலைப்பு முயற்சிகளுக்குப் பிறகு, உயரடுக்குப் படைப்பிரிவான CAPSAT நாட்டின் மீதான கட்டுப்பாட்டைக் கைப்பற்றி அரசியல் நெருக்கடியை அதிகரித்தது.
- மடகாஸ்கர், இந்தியப் பெருங்கடலில் மொசாம்பிக்கிலிருந்து 400 கிலோ மீட்டர் கிழக்கே அமைந்துள்ள ஒரு தீவுக் குடியரசு ஆகும்.
- 1960 ஆம் ஆண்டில் பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெற்ற இந்நாட்டின் தலைநகரம் அண்டனானரிவோ ஆகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★